செ.வெ.எண்-67 நாள்-30.10.2018

# பத்திரிக்கைச் செய்தி

தமிழக அரசு புதியதாக புத்தாக்க பற்றுச்சீட்டு என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டம் 400 குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவங்களின் தொழில் முனைவோருக்கு ஆண்டுதோறும் ரூ.20.00 கோடி வரவு செலவு திட்டத்தில் தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சென்னை மூலம் வருடம் 2018-19 முதல் செயல்படுத்தப்படும். இத்திட்டம் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவங்களின் கண்டுபிடிப்பு திறனை அதிகரிக்கவும், புதுமையான தயாரிப்புகள் வணிக ரீதியாக செயல்படுத்தக் கூடியதாகும். விஞ்ஞானம் மற்றும் கண்டுபிடிப்புகளில் விழிப்புணர்வு மற்றும் பங்கு பெறுதலை அதிகரித்தல், தொழில்துறை, கல்வியியல் மற்றும் அரசு ஆகியவற்றிற்க்கு இடையில் ஒத்துழைப்பை ஊக்குவித்தல் மற்றும் நிலைப்படுத்துதல் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்தில் இரண்டு வகைகள் உள்ளன.

ஆராய்ச்சியில் நுழைதல் - ஒரு புதிய தயாரிப்பு அல்லது உற்பத்தி செயல்முறை வளர்ச்சிக்கு முன்னால் கண்டுபிடிப்பு சாத்தியமான பகுப்பாய்வுக்கு பற்றுச்சீட்டு (A) பயன்படுத்த வேண்டும். சந்தையில் நுழைதல் - ஒரு புதுமையான வணிக தயாரிப்புகளை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் சாத்தியமான சந்தை வாய்ப்புகளை விரைவாக அனுகுவதற்கு ஏற்கனவே இருக்கும் அல்லது ஆரம்ப கால தொழிலை மேம்படுத்துவதற்கு பற்றுச்சீட்டு (B) பயன்படுத்த வேண்டும். பற்றுச்சீட்டு (A) அதிகபட்சமாக ரூ.2.00 இலட்சத்துக்கு உட்பட்டு அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கான அறிவுத்திறன் பங்குதாரின் செலவில் 80% அதாவது ஒரு நிறுவனத்தின் தொழில் நுட்ப வணிக ரீதியான புதிய யோசனைகளை செயல்படுத்த மற்றும் தொழில் நுட்ப கண்டுபிடிப்புக்கான அபிவிருத்திக்கான வழிகளை ஆராய்தல். பற்றுச்சீட்டு (B) தயாரிப்பு / செயல்முறை / வணிக மாதிரி கண்டுபிடிப்புத் திட்டத்தை செயல்படுத்துவதற்கு அதிகபட்சமாக ரூ.5.00 இலட்சத்திற்கு உட்பட்ட அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கான அறிவுத்திறன் பங்குதாரரின் செலவில் வழங்கப்படும்.

ரூ.1.00 இலட்சத்திற்கு கீழ் உள்ள திட்டங்கள் இத்திட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது மற்றும் மாற்றக் கூடியதும் அல்ல. பற்றுச்சீட்டு (A) மற்றும் பற்றுச்சீட்டு (B) இல் குறிப்பிடப்பட்ட நிதிக்கு அதிகமாக செலவழிக்கப்பட்ட மதிப்பீடு அல்லது செலவினங்கள் விண்ணப்பதாரரின் சொந்த செலவில் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். பற்றுச்சீட்டு விநியோகிக்கப்பட்ட நாளிலிருந்து 12 மாதங்கள் வரை செல்லுபடியாகும்.

இத்திட்டத்தில் ஆண்டு தோறும் தொழில் மற்றும் வணிக துறை இணையதளம் **www.indcom.tn.gov.in/ivp-ன்** மூலம் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம். இந்த விண்ணப்பங்களை தொழில் நுட்ப குழு ஆய்வு செய்து, வழி காட்டு குழுவின் மூலம் தேர்வு செய்யப்படும். குறு, சிறு மற்றும் நடுத்தர தொழிலை சார்ந்தவர்கள் இத்திட்டத்தின் மூலமாக பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**